Student/Registration Number | | | | | | | | | | | | Centre Number | | | | | | |

## 2010 PUBLIC EXAMINATION

# Tamil

## Continuers Level

**Tuesday 19 October: 2 p.m. Eastern Standard Time**

Reading Time: 10 minutes
Working Time: 2 hours and 50 minutes

- *You have 10 minutes to read all the papers and to familiarise yourself with the requirements of the questions. You must not write during this time.*
- *Monolingual and/or bilingual printed dictionaries may be consulted during the reading time and also during the examination.*

## Section 1: Listening and Responding (30 marks)

**Instructions to Students**

1. Allow approximately 50 minutes for Section 1.
2. Write all your answers to the questions in Section 1 in this booklet in blue or black ink or ball-point pen. Space is provided for you to make notes.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

© Victorian Curriculum and Assessment Authority 2010

www.theallpapers.com

**Part A** (Questions 1–4)
(20 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information and convey the information accurately and appropriately.*

---

You will hear FOUR texts. Each text will be played twice. There will be a short break between the first and second playings in which you may make notes.

Listen carefully to each text and then answer the questions in ENGLISH.

**Marks** | You may make notes in this space.

**Text 1**

1. (a) Why does the son want his father to walk? **2**

_______________________________________________

_______________________________________________

(b) Tick (✓) the correct answer. **1**

The man's emotions, in the correct order, are

(A) confusion, happiness, disappointment. ☐

(B) disappointment, happiness, confusion. ☐

(C) disappointment, confusion, happiness. ☐

(D) happiness, disappointment, confusion. ☐



www.theallpapers.com

Marks

You may make notes in this space.

**Text 2**

2. (a) What is the purpose of Mary's visit to Nathan? **2**

(b) How does Nathan show his hospitality and goodwill? **3**



www.theallpapers.com

Marks

You may make notes in this space.

**Text 3**

3. (a) Tick (✓) the correct answer. **1**

Where or when is this conversation taking place?

(A) in a park ☐

(B) at a parking station ☐

(C) on a Saturday evening ☐

(D) at the end of a driving lesson ☐

(b) What evidence is there that the girl is enthusiastic and conscientious? **4**

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________



www.theallpapers.com

Marks

You may make notes in this space.

**Text 4**

4. Why did the lady say that the man was clever? Explain with reference to the man's life. **7**



PLEASE TURN OVER

www.theallpapers.com

## **Part B** (Questions 5–6)
(10 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*
- *understand general and specific aspects of texts by identifying and analysing information;*
- *convey the information accurately and appropriately.*

---

You will hear TWO texts, one relating to Question 5 and one relating to Question 6. Each text will be played twice. There will be a short break between the first and second playings in which you may make notes.

Listen carefully to each text and then answer the questions in TAMIL.

**Marks** | You may make notes in this space.

**Text 5**

5. (a) Why could Vimala and her family not reach their final destination on time? **3**

விமலாவும் அவரது குடும்பமும் அடைய வேண்டிய இடத்தை ஏன் உரிய நேரத்துக்கு அடைய முடியவில்லை?

(b) How does Theepan show respect for his guests? **2**

தீபன் தனது விருந்தினரை எவ்வாறு உபசரித்து மதிப்பளிக்கிறார்?



www.theallpapers.com

| | Marks | You may make notes in this space. |
|---|---|---|

**Text 6**

6. (a) What is Sivamalar's role? **2**

சிவமலரின் கடமைகள் எவை?

(b) Why is the doctor concerned? **3**

வைத்தியர் ஏன் கவலை அடைந்துள்ளார்?

**End of Section 1**



www.theallpapers.com

Student/Registration Number | | | | | | | | | | | |    Centre Number | | | | | | |

# 2010 Public Examination

# Tamil

## Continuers Level

## Section 2: Reading and Responding (30 marks)

**Instructions to Students**

1. Allow approximately 1 hour and 15 minutes for Section 2.
2. Write all your answers to the questions in Section 2 in this booklet in blue or black ink or ball-point pen.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

© Victorian Curriculum and Assessment Authority 2010

www.theallpapers.com

**Part A** (Questions 7–8)
(20 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and/or specific aspects of texts, by, for example, comparing, contrasting, summarising, or evaluating, and convey the information accurately and appropriately.*

---

7. Read the text and then answer in ENGLISH the questions that follow.

அங்கத்தவர் அனைவருக்கும்!

நான் நலம். மிகவும் சிறந்த ஒரு தமிழ்விழாவைப் பார்க்க அவுஸ்ரேலியத் தமிழ்ச்சங்கப் பிரதிநிதியாக என்னை ஐக்கிய அமரிக்காவுக்கு அனுப்பி, ஓர் அரிய சந்தர்ப்பத்தை வழங்கிய உங்கள் ஒவ்வொருவருக்கும் மீண்டும் நன்றி கூறுகிறேன்.

ஜோஜியா பல்கலைக்கழக வளாகம் வாழை தோரணங்கள் கொண்டு நன்கு அலங்கரிக்கப்பெற்றிருந்தது. சிறுவர்கள் உட்பட அனைவருமே தமிழ்ப் பண்பாட்டு வண்ணப்பட்டாடைகள் அணிந்து மங்கலகரமாக விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர். ஒவ்வொரு நிகழ்ச்சியும் நிமிடம் தப்பாமல் உரிய நேரத்துக்கு ஆரம்பித்து உரிய நேரத்துக்கு நிறைவடைந்தது. வெளிமாநிலத்தவர்களும் கனடாவில் இருந்து வந்தவர்களும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து கலந்துகொண்டவர்களும் தங்குவதற்காக, பல்கலைக்கழக விடுதிச்சாலைகள் எல்லாவற்றையும் வாடகைக்குப் பெற்றிருந்தார்கள். நானும் அங்கேயே தங்கினேன். விழாமண்டபத்துக்குச் செல்லவும் திரும்பவும் உல்லாசப்பேருந்துகள் ஒழுங்குசெய்யப்பெற்றிருந்தன.

சிறியோரின் கலைநிகழ்ச்சிகள், கல்விமான்களின் ஆய்வுமன்றங்கள், அறிவியல் அறிவுப்போட்டிகள், நாடகங்கள், பட்டிமன்றங்கள் முதலிய எல்லா நிகழ்ச்சிகளும் பிரமிக்கத்தக்க வகையில் திட்டமிடப்பட்டு, கடுமையான பயிற்சியின் பின்னர் அனைவரும் பாராட்டும்படி அரங்கேறின.

வயது எதுவாக இருந்தாலும் தமிழறிவின் தரம் என்னவாக இருந்தாலும் ஒவ்வொருவரும் உச்சத்திருப்தி அடையும் வகையில் மூன்று நாள் விழாவும் ஒழுங்கு செய்யப்பெற்றிருந்தது. நிகழ்ச்சியில் பங்குபெறுவதற்காகத் தமிழ்நாட்டிலிருந்து பல தமிழறிஞர்கள் அழைக்கப் பெற்றிருந்தார்கள். ஆயினும் வடஅமரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் வாழும் தமிழறிஞர்கள் அவர்களுக்குச் சிறிதும் சளைத்தவர்கள் அல்ல என்பது கவியரங்கு, பட்டிமன்றம், ஆய்வுக்களம் என்பவற்றின் மூலம் தெளிவாகத்தெரிந்தது. அமரிக்க அறிஞர்களின் சிறப்புரைகள், குறிப்பாக ஹெலன் ஷான்டர் என்பவரின் உரை அனைவரையும் பெருவியப்பில் ஆழ்த்தியது.

உலகின் தலை சிறந்த தமிழ்ப் படைப்பாளிகளிடம் இருந்து பெற்ற, பலவித ஆய்வுக்கட்டுரைகள் கொண்ட விழா மலர் ஒன்றையும் பெரும் பொருட்செலவில் மிக அழகாகப் பிரசுரித்து, இறுதி நாள் நிகழ்வில் வெளியிட்டு இருந்தார்கள். எமது சங்க நூலகத்திற்காக மூன்று பிரதிகள் தந்திருந்தார்கள். செயலாளரின் வீட்டுக்குத் தபாலில் அனுப்பியுள்ளேன்.

நிகழ்ச்சிகளின் அடிப்படையில் ஒளிப்பதிவு செய்யப்பெற்ற ஒளிவட்டுக்களை விலைக்குப் பெற ஒழுங்குகள் செய்துள்ளேன். எமது உறுப்பினர்கள் பார்த்து மகிழ வாய்ப்பு ஏற்படும். இப்போது சில புகைப்படங்களை இணைத்துள்ளேன்.

அன்புடன்
சிற்பரன்



www.theallpapers.com

QUESTIONS

**Marks**

(a) How has Sitparan shown his appreciation as the Australian delegate? **3**

(b) Complete this table to show the role of the people attending this festival. **5**

| Country | Role |
| --- | --- |
| USA | • <br> • <br> • <br> • |
| Other countries | • |

(c) How does such a festival support the Tamil language? **2**



www.theallpapers.com

8. Read the text and then answer in ENGLISH the questions that follow.

தற்போது செய்தி ஊடகங்கள் எல்லாவற்றிலுமே பிள்ளைகளின் உணவு உடற்பயிற்சி தொடர்பான பல கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. கிங்ஸ்லான்ட் கல்லூரியில் இருந்து மாணவர்குழு ஒன்று– உண்மையில் அவர்கள் எமது பழையமாணவர்கள்– எமது ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு உடல்வலிமைத் தரத்தை உயர்த்த உதவி வருகிறார்கள். எமது பிள்ளைகள் வீட்டு வேலை செய்தல், தொலைக்காட்சி பார்த்தல், வாசித்தல், விளையாடுதல் என்பவற்றுக்கிடையில் ஒரு சமநிலை பேணப்படுவது அவசியமாகும். இவற்றை ஒரு ஒழுங்கான சுழற்சி அடிப்படையில் செய்து வந்தால் பிள்ளைகளுக்குத் தன்னம்பிக்கை பெருகுவதோடு எந்த நேரத்தில் எது நடைபெறும் என்பதை அவர்கள் தெரிந்து வைத்திருக்கவும் உதவியாக இருக்கும். பிள்ளைகள் சுயேட்சையாக, பிறர் உதவியின்றிக் கற்கவும் கற்றலை ஒழுங்கான முறையில் வழக்கப்படுத்திக்கொள்ளவும் உதவுமாயின் பாடசாலையில் வழங்கப்படும் வீட்டுவேலைகள் பெரிய அளவு நன்மை பயப்பனவாக விளங்கும். அதேசமயம் பெற்றோர், பிள்ளைகளின் கற்றலில் பங்குபற்றவும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. எப்படி இருந்தாலும் பிள்ளைகள் வீட்டுவேலைகளை நிறைவுசெய்வதில் கஷ்டப்படுவார்களாயின் தயவுசெய்து ஆசிரியருக்குத் தெரியப்படுத்துங்கள்.

மேலும் உங்கள் பிள்ளைகள் மிகவும் சுறுசுறுப்பாக இருப்பதற்குப் பல சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியமானதாகும். இந்தச்சந்தர்ப்பங்கள் பலதரப்பட்டவையாக, அவர்களின் வயதுக்கு ஏற்றபடியும் அவர்களின் மனதைக் கவரக்கூடியதாகவும் இருப்பதை உறுதி செய்யவேண்டும். தனி அல்லது குழு விளையாட்டுக்கள், உடற்பயிற்சி எனப்பலவாறாக இருப்பது நல்லது.

விளையாட்டு உடற்கல்விக்கான தேசியக்கூட்டமைப்பு, பாடசாலைப்பிள்ளைகள் தினமும் அறுபது நிமிடங்களுக்குக் குறையாமல் உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டும் என்றும் பதினைந்து நிமிடங்களுக்குக் குறைவில்லாத பல பிரிவுகளாக இவை மேற்கொள்ளப்படலாம் என்றும் தெரிவிக்கிறது. மேலும், உடலை இரண்டு மணித்தியாலத்துக்குமேல் தொடர்ந்து எதுவித அசைவோ ஈடுபாடோ இல்லாமல் வைத்திருக்கக் கூடாது என்றும் தெரிவிக்கிறது.

தொலைக்காட்சி பார்க்கச் செலவிடும் நேரத்தைவிட, கணினியிலும் அல்லது கணினியுடன் சேர்ந்த விளையாட்டுக்களிலும் நேரத்தைச் செலவிடும் அளவு இப்போது அதிகரித்து விட்டதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஒரே இடத்தில் இருந்து இந்த வகையில் நேரத்தைச் செலவிடுவது பிள்ளைகளிடத்தில் சில அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தும். பெற்றோர்கள் இத்தகைய பிள்ளைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது.

தென்கொரியாவில் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தொலைக்காட்சியில் அல்லது கணினிகளில் என்ன செய்கிறார்கள், எவ்வளவு நேரத்தைக் கழிக்கிறார்கள் என்ற விபரங்களைத் தமது கைத்தொலைபேசியில் மேற்பார்வை செய்யக்கூடிய வசதிகள் செய்யப்பெற்றுள்ளன. இதன் மூலம் பிள்ளைகள் எவ்வளவு நேரத்தைப் படிப்பதில் பயன்படுத்துகிறார்கள், எவ்வளவு நேரம் இணையத்தளத்தில் அளவளாவுகிறார்கள் என்பதைப் பெற்றோர்கள் அறியும் வாய்ப்பு இருக்கிறது. இது கவனிக்கப்பெறத்தக்க ஒரு விடயமாகும். உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் உங்களின் கைகளில்.



www.theallpapers.com

QUESTIONS

**Marks**

(a) Tick (✓) the correct answer. **1**

You would be most likely to read this text in a

(A) health review. ☐

(B) school newsletter. ☐

(C) computer magazine. ☐

(D) psychology journal. ☐

(b) How is the author's point of view justified? **6**

(c) What language is used to convince the audience of the author's point of view? **3**





www.theallpapers.com

**Part B** (Question 9)
(10 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and specific aspects of a text by identifying, analysing, and responding to information;*
- *convey information coherently (structure, sequence, accuracy and variety of vocabulary and sentence structure) and appropriately (relevance, use of conventions of the text type).*

---

9. Read the text and then answer the question in 150–200 words in TAMIL on page 7.

## இலைக்கலசம்

நீண்டகாலமாக மனிதவினம் இயற்கையோடு இணைந்த வாழ்க்கை வாழ்ந்து வந்தது. தமிழர்களும் பல்லாயிரம் வருடங்களாக, இயற்கையாக வளர்ந்த அல்லது பயிரிடப்பெற்ற உணவுப்பொருள்களை மட்பாண்டங்களில் சமைத்து பனையோலை, வாழையிலை முதலிய இலைகளாலான கலசங்களில் உண்டும் குடித்தும் வாழ்க்கை நடத்தினர்.

கடந்த சில தசாப்தங்களாகப் பிளாஸ்ரிக் பாத்திரங்கள் இலைகளின் இடத்தைப் பிடித்தன. சூழலைப் பெரிதும் மாசுபடுத்துகின்றதும் ஆரோக்கியத்துக்குக் கேடுவிளைவிப்பதுமான இவற்றைப் பலநாடுகளும் மாநிலங்களும் இப்போது தடைசெய்து வருகின்றன.

இக்காரணத்தினால் இப்போது இலைக்கலசங்களின் பயன்பாடு மீண்டும் பெருகத்தொடங்கியுள்ளது. வாழையிலை, மடல், பனையோலை, கமுகம்பாளை முதலிய தாவரப்பொருள்களை நீரில் ஊறவிடுகிறார்கள். தேவைக்கு அல்லது வாடிக்கையாளரின் விருப்பத்துக்கு ஏற்ற அளவுகளிலும் வடிவங்களிலும் அச்சுக்களைச் செய்கிறார்கள். செய்யப்பெற்ற அச்சுக்களில் ஊறிய பொருட்களை, தனியாகவோ கலந்தோ இட்டுப் பொருத்தமான வெப்பத்தையும் அழுத்தத்தையும் பிரயோகிக்கும்போது இவை சிறந்த கொள்கலன்களாக மாறுகின்றன.

தமிழ்நாட்டில் இராமநாதபுரம் பகுதிகளில் மூலப்பொருள்கள் அதிகம் கிடைப்பதனால் இங்கு 'இலைக்கலசம்' என்ற பெயரில் உற்பத்தி நடைபெறுகிறது. மக்கள் மூலப்பொருட்களை இத்தொழிற்சாலைகளுக்கு விற்றுப் பணம் சம்பாதிக்கிறார்கள். உற்பத்தியாளரும், மூலப்பொருள்கள் வைத்திருப்போர் அழைத்தால் அங்குசென்று விலைகொடுத்து, பொருத்தமான பருவத்தில் அவற்றை வெட்டிக்கொள்கிறார்கள். உரிய பதத்தில் இவற்றை வெட்டியெடுத்தால் வலிமையும் வெண்மையும் அதிகமாக இருக்கும். இவை வாடிக்கையாளரைப் பெரிதும் கவரும்வண்ணம் கவர்ச்சியாகக் காணப்படும்.

மருத்துவக்குணம் அதிகமுள்ளதாகவும், உடல்நலத்துக்கு உதவுகின்றதுமான இக்கலசங்கள் குளிர்களி நிலையங்கள், உணவுச்சாலைகள் முதலிய இடங்களில் பிரபல்யம் அடைந்துள்ளன. இதனால் இவற்றின் தேவை பன்மடங்காகி வருகிறது. வீசும்போது நிலத்திற்குப் பசளையாகின்ற மலிவான இக்கலசங்களைத் தயாரிப்பதில் பல முதலீட்டாளர்களும், விரும்பி வாங்குவதில் மக்களும் முண்டியடிக்கிறார்கள்.

QUESTION

'Illikalasam' industry is going to launch a website soon. Prepare a persuasive message to promote this industry to be published on the front page of their website.

'இலைக்கலசம்' தொழிற்சாலை விரைவில் ஓர் இணையத்தளத்தை ஆரம்பிக்க உள்ளது. இந்தத் தொழில் விருத்தி அடையத்தூண்டும் வகையில் அந்த இணையத்தளத்தின் முதற்பக்கத்தில் வெளியிடுவதற்கு ஒரு செய்தியைத் தயாரிக்குக.



www.theallpapers.com

*Do not remove this page from the question booklet.*

Student/Registration Number

Centre Number

Tamil
Continuers Level

Question 9



PLEASE TURN OVER

www.theallpapers.com

**End of Section 2**



www.theallpapers.com

Student/Registration Number

Centre Number

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**2010 Public Examination**

# Tamil

## Continuers Level

## Section 3: Writing in Tamil (15 marks)

**Instructions to Students**

1. Allow approximately 45 minutes for Section 3.
2. Write your answer to a question from Section 3 in this booklet in blue or black ink or ball-point pen. Space is provided for you to make notes.
3. You must answer ONE question in TAMIL.
4. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
5. All question booklets will be collected at the end of the examination.

© *Victorian Curriculum and Assessment Authority 2010*

www.theallpapers.com

**Section 3** (Questions 10–13)
(15 marks)

---

*When judging performance in this section, the examiner(s) will take into account the extent to which the student demonstrates:*

- *relevance and depth of treatment of ideas, information, or opinions;*
- *accuracy and range of vocabulary and sentence structures;*
- *the capacity to structure and sequence response and capacity to use conventions of the text type.*

---

Answer ONE question from this section in 200–250 words in TAMIL.

10. You have moved away from home, and are now not sure if this was the right thing to do. Write your thoughts in your diary.

    நீர் உமது வீட்டை விட்டு வெளியே வாழத் தொடங்கிவிட்டீர், இப்போது அவ்வாறு செய்தது சரியா என்று யோசிக்கிறீர். இது தொடர்பான எண்ணங்களை உமது தினக்குறிப்பேட்டில் எழுதுக.

11. 'Australia is a relaxed society, based on personal choices by individuals.' Write an informative article for a newspaper to be published in a Tamil-speaking country.

    'அவுஸ்ரேலியச் சமுதாயம் தனிப்பட்டவர்களின் சொந்தத் தெரிவுகளை அடிப்படையாகக் கொண்ட நெகிழ்ச்சியான ஒரு சமுதாயமாகும்.' இது பற்றிய தகவல்களைத் தெரிவித்து, தமிழ்பேசும் நாடொன்றின் பத்திரிகைக்கு ஒரு கட்டுரை எழுதுக.

12. After surveying students at your school, at the request of your teacher, write an evaluative report to be published in your school magazine comparing the advantages and disadvantages of co-educational classes.

    உமது ஆசிரியர் கேட்டுக்கொண்டதன்படி, ஆண்களும் பெண்களும் படிக்கும் கலவன் பாடசாலையின் நன்மைகள் தீமைகள் பற்றி உமது பாடசாலை மாணவர்களிடையே ஒரு கணிப்பை மேற்கொண்டிருந்தீர். இதுபற்றிய மதிப்பீட்டுக் கட்டுரையை உமது பாடசாலைச் சஞ்சிகையில் வெளியிடுவதற்காகத் தயாரிக்குக.

13. A friend is angry about the male-dominated environment in her workplace. She discovers a magic stick that makes her invisible at her wish. She sets to work with it. Write an imaginative story of the consequences.

    உமது நண்பி ஒருவர் தனது வேலைத் தலத்தில் காணப்படும் ஆண்களின் ஆதிக்கச் சூழ்நிலையை எண்ணி ஆத்திரப்படுகிறாள். நினைத்த பொழுதில் தன்னை மறைத்துக் கொள்ளும் சக்திவாய்ந்த ஒரு மந்திரக் கோலை அவள் கண்டு பிடிக்கிறாள். அதனை உபயோகிக்கத் தொடங்குகிறாள். இதனால் ஏற்படும் விளைவுகளை ஒரு கற்பனைக் கதையாக எழுதுக.



www.theallpapers.com

You may make notes in this space.





www.theallpapers.com

Question Number:



www.theallpapers.com

www.theallpapers.com

**End of Section 3**



www.theallpapers.com